டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 14.07.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 022 - Madurai | Online Edition

# ஒரு மணி நேரத்தில் 3.61 லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டு கின்னஸ் உலக சாதனை

## மத்திய அமைச்சர் அமித் ஷா பாராட்டு

புது தில்லி, ஜூலை 13

மியாவாகி முறையைப் பயன்படுத்தி ஒரு மணி நேரத்தில் 3.61 லட்சத்திற்கும் அதிகமான மரக்கன்றுகளை நட்டு கின்னஸ் உலக சாதனை படைத்ததற்காக, அகமதாபாத் மாநகராட்சிக்கும், இதனுடன் தொடர்புடைய 25,000-க்கும் மேற்பட்ட தன்னார் வலர்களுக்கும், காந்திநகர் மக்களவைத் தொகுதி மக்களுக்கும் மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சரும், காந்திநகர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான அமித் ஷா தனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு உள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையின் கீழ், சுற்றுச்சூழல் பாதுகாப்பு இன்று ஒரு மக்கள் இயக்கமாக மாறியுள்ளது என்று அமித் ஷா கூறினார். 'தாயின் பெயரில் ஒரு மரக்கன்று' என்ற பிரச்சாரம், இயற்கையைப் பாதுகாக்கும் உன்னதமான பணி உடன் நாடு முழுவதும் உள்ள கோடிக்கணக்கான குடிமக்களை இணைத்துள்ளதாக அவர் தெரிவித்தார். சுற்றுச்சூழல் பாது காப்புத் துறையில் வரலாற்றுச் சிறப்புமிக்க மைல் கல்லை எட்டியதன் மூலம், காந்திநகர் மக்களவைத் தொகுதி இந்த இயக்கத்திற்குப் புதிய உத்வேகத்தை அளித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

காந்திநகர் மக்களவைத் தொகுதியில் ஆக்ஸிஜன் பூங்காக் களின் உருவாக்கம், பெருமளவிலான மரக்கன்றுகளின் நடவு, குளங்களின் சீரமைப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான பல்வேறு மக்கள் இயக்கங்கள் ஆகியவற்றின் மூலம், பிரதமர் நரேந்திர

மோடியின் 'இயற்கையுடன் இணைந்த முன்னேற்றம்', 'நிலையான வளர்ச்சி' ஆகிய தொலைநோக்குப் பார்வை நடைமுறைப் படுத்தப்பட்டு வருவதாக அமித் ஷா தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பசுமை வளர்ச்சி ஆகிய துறைகளில் காந்திநகர் மக்களவைத் தொகுதி இன்று நாட்டிற்கே ஒரு முன் மாதிரியாகத் திகழ்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பிரதமர் நரேந்திர மோடியின் 'தாயின் பெயரில் ஒரு மரக்கன்று' இயக்கத்தில் இணையுமாறும், அதிக மரங்களை நட்டு, தாங்கள் நட்ட மரக்கன்றுகளைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்குமாறும் அமைச்சர் மக்களைக் கேட்டுக்கொண்டார். பொதுமக்களின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்படும் இத்தகைய இயக்கங்கள், எதிர்கால சந்ததியினருக்குத் தூய்மையான, பசுமையான, சூழலியல் சமநிலை கொண்ட சூழலை உறுதி செய்வதுடன், வளர்ச்சியடைந்த இந்தியா கட்டமைப்பிலும் முக்கியப் பங்காற்றும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

## நீர், மண் பாதுகாப்பு மற்றும் சமச்சீர் விவசாயத்தில் கவனம் செலுத்தி சுற்றுச் சூழலையும் வாழ்க்கையையும் பாதுகாக்க வேண்டும்

## மத்திய அமைச்சர் சிவராஜ் சிங் பேச்சு

புது தில்லி, ஜூலை 13

புதுதில்லியில் உள்ள பூசா வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட 'சுற்றுச்சூழல் பாதுகாப்பு உறுதிப்பாட்டுத் திட்டம் மற்றும் விருக்ஷ மித்ரா சம்வாத் என்ற நிகழ்ச்சியின் போது, மத்திய வேளாண் துறை அமைச்சர் சிவராஜ் சிங் சௌஹான், நாடு முழுவதிலுமிருந்து இணைந்திருந்த சுமார் 17,000 'விருக்ஷ மித்ரா எனப் படும் மரக் கன்று நடும் ஆர்வலர்களிடையே உரையாற்றினார்.

நாட்டின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 'விருக்ஷ மித்ராக் கள்' நேரில் பங்கேற்க, ஆயிரக்கணக்கானவர்கள் இணைய வழியாக இணைந்தனர். மரங்கள், நீர், மண், ஆற்றல் சேமிப்பு, நெகிழியில்லா வாழ்க்கை ஆகியவற்றை பொதுமக்களின் பங்கேற்புடன் இணைப்பதன் மூலம் பூமியைக் காக்க வேண்டும்

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

என்ற ஒருமித்த செய்தியை அனைவரும் ஒன்றிணைந்து வழங்கினர்.

மத்திய அமைச்சர் சிவராஜ் சிங் சௌகான், 'விருக்ஷ மித்ரா'க்களிடமிருந்து பெறப்பட்ட ஆலோசனைகள், கலந்துரையாடல்களின் அடிப்படையில், சுற்றுச்சூழல் பாதுகாப்பை ஒரு உறுதியான மக்கள் இயக்கமாக மாற்றுவதற்கான தெளிவான, எளிமையான செயல் திட்டத்தை முன்வைத்தார்.

ஒவ்வொரு குடும்பமும் பிறந்தநாள், திருமண நாள், குழந்தை பிறப்பு, பெற்றோரின் புனிதமான நினைவுகள் போன்ற தருணங்களில் ஒரு மரக் கன்றை நட்டு, அவற்றை 'மரத் திருவிழாக்களாக' மாற்ற வேண்டும் என்றும், இதன் மூலம் இந்த பாரம்பரியம் மெல்ல மெல்ல ஒவ்வொரு வீட்டிலும் ஒரு பழக்கமாக மாறும் என்றும் அவர் கூறினார்.

தேசிய, மாநில, மாவட்ட, வட்டார, கிராம அளவுகளில் 'விருக்ஷ் மித்ரா பரிவார்' குழுக்களை அமைத்து, இந்த முழுப் இயக்கத்தையும் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்பில் நடத்துவதற்கும், இந்தக் கட்டமைப்பை முறைப்படி பதிவு செய்வதற்கும், பஞ்சாயத்துகள், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மரம் நடுவதற்கான நிலையான இடங்களை அடையாளம் காண்பதற்கும் சௌகான் அழைப்பு விடுத்தார்.

இது சுற்றுச்சூழல் பிரச்சினை மட்டுமல்ல எனவும், மனித வாழ்விற்கேயான ஒரு நெருக்கடி என்றும் அவர் கூறினார். உயர்ந்து வரும் கடல் மட்டம், அதிகரித்து வரும் வெப்பம், மாசடைந்த காற்று, அசுத்தமான நீர், வேகமாக அழிந்து வரும் பல்லுயிர் வளம் ஆகியவை வரும் தலைமுறையினரின் வாழ்க்கைக்கு நேரடி அச்சுறுத்தல்களாக நிற்கின்றன என்று அவர் தெரிவித்தார். உலகம் முழுவதும் நடக்கும் நிகழ்வுகளையும் அறிவியல் உண்மைகளையும் சுட்டிக்காட்டி, இப்போது உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால், 2050, அதற்குப் பிறகான நிலைமை மிகவும் கவலையளிப்பதாக இருக்கும் என்று அவர் கூறினார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# எல்நினோ பாதிப்பால் பயிர் இழப்பு அபாயம்! பயிர் காப்பீடு செய்ய அவசர அழைப்பு!!

சேலம், ஜுலை 13

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டார விவசாயிகள் பயிர் காப்பீடு செய்ய வேளாண் மற்றும் தோட்டக்கலைத்துறை அவசர அழைப்பு விடுத்துள்ளனர்.

உலகளாவிய காலநிலை மாற்றத்தின் காரணமாக நடப்பு ஆண்டில் 'எல் நினோ' (El Niño) விளைவுகளால் போதிய பருவமழை பொய்க்க வாய்ப்புள்ளதாகவும், இதனால் வறட்சி மற்றும் கடுமையான வெப்ப அலைகளால் பயிர் உற்பத்தி பாதிக்கப்பட்டு மகசூல் இழப்பு ஏற்படக்கூடும் என்றும் வேளாண் வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர். இந்த இக்கட்டான சூழ்நிலையில், விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் பொருட்டு, சேலம் மாவட்டம் எடப்பாடி வட்டார வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை இணைந்து காரிஃப் 2026 பருவத்திற்கான பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் (PMFBY) கீழ் பதிவு செய்ய விவசாயிகளுக்கு அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இயற்கை சீற்றங்கள், வறட்சி அல்லது பூச்சித் தாக்குதலால் ஏற்படும் மகசூல் இழப்பை ஈடுசெய்ய, காப்பீடு செய்வதற்கான கடைசி தேதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

**1. வேளாண் பயிர்களுக்கான காப்பீடு விவரங்கள் (காப்பீட்டு நிறுவனம் : க்ஷேமா ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடெட்)**

| வ. எண் | பயிர்கள் | காப்பீட்டுத் தொகை (ஏக்கருக்கு ரூ.) | விவசாயியின் பிரீமியம் பங்கு (ஏக்கருக்குரூ.) | காப்பீடு செய்ய கடைசி நாள் |
|---|---|---|---|---|
| 1. | நெல் | 38,630 | 773 | 31-07-26 |
| 2. | சோளம் | 10,176 | 204 | 17-08-26 |
| 3. | சாமை | 9,979 | 200 | 17-08-26 |
| 4. | நிலக்கடலை | 22,329 | 447 | 17-08-26 |
| 5. | ராகி | 12,606 | 253 | 31-08-26 |

**2. தோட்டக்கலை பயிர்களுக்கான காப்பீடு விவரங்கள் (எடப்பாடி மற்றும் பூலாம்பட்டி ஃபிர்கா)**

***தோட்டக்கலை பயிர்களைப் பயிரிட்டுள்ள விவசாயிகள் பின்வரும் இறுதி தேதிகளுக்குள் காப்பீடு செய்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள் :***

**வெண்டை (Bhendi) – எடப்பாடி ஃபிர்கா :** காப்பீடு செய்ய கடைசி நாள் : 31 ஆகஸ்ட் 2026

**வெங்காயம் (Onion) – பூலாம்பட்டி ஃபிர்கா :** காப்பீடு செய்ய கடைசி நாள் : 31 ஆகஸ்ட் 2026

**வாழை (Banana) – பூலாம்பட்டி ஃபிர்கா :** காப்பீடு செய்ய கடைசி நாள் : 15 செப்டம்பர் 2026

**மஞ்சள் (Turmeric) – பூலாம்பட்டி ஃபிர்கா :** காப்பீடு செய்ய கடைசி நாள் : 15 செப்டம்பர் 2026

**தேவையான ஆவணங்கள் மற்றும் பதிவு செய்யும் முறை**

**முக்கிய ஆவணங்கள்**

காப்பீடு செய்ய விரும்பும் விவசாயிகள் முன்மொழிவு படிவத்துடன் அடங்கல், நடப்பில் உள்ள சேமிப்பு வங்கி கணக்கு புத்தக நகல், ஆதார் அட்டை நகல், மற்றும் நில உரிமைப் பட்டா ஆகிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

வங்கி கடன் பெறும் மற்றும் கடன் பெறாத குத்தகை விவசாயிகள் உட்பட அனைத்து விவசாயிகளும் தங்களின் விருப்பத்தின் பேரில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், வணிக வங்கிகள் மற்றும் பொது சேவை மையங்கள் (CSC) மூலமாக உரிய பிரீமியத் தொகையை செலுத்தி காப்பீடு செய்து கொள்ளலாம்.

எல் நினோ போன்ற எதிர்பாராத பருவநிலை மாற்றங்களால் ஏற்படும் பயிர் இழப்புகளில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள, எடப்பாடி வட்டார விவசாயிகள் கடைசி நேர நெருக்கடியைத் தவிர்த்து, உடனடியாக காப்பீடு செய்யுமாறு வேளாண்மை உதவி இயக்குனர் மற்றும் தோட்டக்கலை உதவி இயக்குனர் எடப்பாடி வட்டார விவசாயிகளுக்கு தெரிவித்து உள்ளனர்.

# சொர்ணவாரி பருவ நெல்லிற்கு பயிர் காப்பீடு செய்திட 2 நாட்கள் மட்டுமே உள்ளது!

இராணிப்பேட்டை, ஜூலை 13

இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டாரத்தில், நடப்பு 2026-27 ஆம் ஆண்டு சொர்ணவாரி பருவத்தில் பயிர் காப்பீடு திட்டதில், வருவாய் கிராம அளவில் சொர்ணவாரி நெல் பயிர் களுக்கு விவசாயிகள் பயிர் காப்பீடு செய்யலாம் என வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குநர், ஜி. திலகவதி தெரிவித்துள்ளார்.

எதிர்பாராத இயற்கை இடர்பாடுகள் மூலம் ஏற்படும் பயிர் சேதங்களின் இழப்பிலிருந்து பாதுகாத்துக்கொள்ள சொர்ணவாரி பருவ பயிர் காப்பீடு திட்டத்தில் பதிவு செய்ய விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டு வருகிறது.

சொர்ணவாரி நெல் பயிர்களை பயிர் காப்பீடு செய்ய வரும் ஜூலை 15-ஆம் தேதி கடைசி நாளாகும். இத்திட்டத்தில் பயிர் கடன் பெறும் மற்றும் கடன் பெறாத அனைத்து விவசாயிகளும் விருப்பத்தின் பேரில் பயிர் காப்பீடு செய்யலாம். இத்திட்டத்தில், நெல் I (சொர்னவாரி பருவம்) பயிருக்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 703/- பிரீமியம் செலுத்தி பயிர் காப்பீடு செய்யலாம்.

இத்திட்டத்தில் பயிர் காப்பீடு செய்ய, I) சிட்டா, II) நடப்பு ஆண்டு பயிர் சாகுபடி அடங்கல், III) ஆதார் அட்டை, IV) வங்கி கணக்கு புத்தகம், ஆகிய ஆவணங்களுடன், அனைத்து தேசிய மயமாக்கப்பட்ட வங்கி கிளைகள், கிராமிய வங்கிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் பொது சேவை மையங்களை (CSC) அணுகலாம்.

2026-ஆம் ஆண்டில் 'சூப்பர் எல் நினோ' நிகழ்வு காரணமாக, செப்டம்பர் வரையிலான மாதங்களில் வெப்பநிலை வழக்கத்தை விட அதிகமாகவும் பருவமழையின் அளவு குறையவும் வாய்ப்பு உள்ளது என்பதாலும் நெற்பயிரை சேதங்களின் இழப்பிலிருந்து

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

பாதுகாத்துக் கொள்ளவும், விவசாயிகள் இறுதி நேர நெரிசலை தவிர்க்கவும், விவசாயிகளின் விண்ணப்பங்கள் விடுபடாமல் இருக்கவும் பயிர் காப்பீடுத் திட்டத்தில் இணைந்து தங்களது நெற் பயிரை முன்கூட்டியே பதிவு செய்ய வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கேட்டுகொள்கிறார்.

வாலாஜா வட்டாரத்தில் கத்தாரிக்குப்பம் கிராமத்தில் நெல் வயலில் ஆய்வு மேற்கொண்டு விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு செய்ய வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குநர், ஜி. திலகவதி தெரிவித்தார். உதவி வேளாண்மை அலுவலர்கள் மீனாட்சிசுந்தரம் மற்றும் நாகராஜன் உடன் இருந்தனர்.



# கூடுதல் மகசூலுக்கு திருந்திய நெல் சாகுபடித் தொழில்நுட்பம் வேளாண்மை இணை இயக்குநர் ஆலோசனை

புதுக்கோட்டை, ஜுலை 13

புதுக்கோட்டை மாவட்டத்தில் குறுவை பருவ நெல் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடித் தொழில் நுட்பத்தைக் கடைப்பிடித்து 40 சத நீரினை மிச்சப்படுத்தலாம் எனப் புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சு.சுந்தரமகாலிங்கம் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது,

**திருந்திய நெல் சாகுபடிக்கான முக்கிய தொழில்நுட்பங்கள்**

● திருந்திய நெல் சாகுபடிக்குத் தரமான, சான்று பெற்ற, உயர் விளைச்சல் / வீரிய ஒட்டு இரகங்களையே பயன்படுத்த வேண்டும்.

● ஒரு ஏக்கர் நடவு செய்ய இரண்டு கிலோ விதைகள் போது மானதாகும்.

● ஒரு ஏக்கர் நடவிற்கு ஒரு செண்ட் (40 சதுர மீட்டர்) நாற்றங்கால் போதுமானது.

● மேட்டுப் பாத்திகள் அமைத்து பாலித்தீன் தாள்களைப் பரப்பி மரச்சட்டங்கள் வைத்து அதில் மண்ணையும் தொழுஉரத்தையும் கலந்த கலவையை நிரப்பி விதைக்க வேண்டும்.

● நடவு வயல் துல்லியமாகச் சமன் செய்யப்பட வேண்டும். சமன் செய்வதற்குத் துல்லிய சமன் செய்யும் கருவியைப் (Laser Leveler) பயன்படுத்தி வயலைத் தயார் செய்திடல் வேண்டும்.

● 10 முதல் 14 நாட்கள் வயதுடைய இளநாற்றுகளை நடவு செய்ய வேண்டும்.

● அடையாளமிடுவதற்கு வசதியாக மார்க்கர் கருவியைப் பயன்படுத்தி 22.5 X 22.5 செ.மீ. இடைவெளியில் சதுர முறையில் நடவு செய்ய வேண்டும்.

● குத்து ஒன்றுக்கு ஒரு நாற்று மட்டுமே வைத்து நடவு செய்ய வேண்டும்.

● கொய்ச்சலும் பாய்ச்சலும் முறையில் அதாவது நீர் மறைய நீர்ப் பாசனம் செய்ய வேண்டும். 2.5 செ.மீ. உயரத்திற்கும் மேல் நீர் நிறுத்துதல் கூடாது.

● கோனோவீடர் எனும் உருளும் களைக்கருவியைக் கொண்டு நடவு செய்த 10ஆம் நாள் முதல் 10 நாட்களுக்கொரு முறை என நான்கு தடவை குறுக்கும்நெடுக்குமாகப் பயன்படுத்திக் களையெடுக்க வேண்டும்.

● பச்சை இலைவண்ண அட்டையைப் பயன்படுத்தித் தேவையான தழைச்சத்தினை மேலுரமாக இடுதல் வேண்டும்.

## திருந்திய நெல் சாகுபடியினால் கிடைக்கும் நன்மைகள்



● திருந்திய நெல் சாகுபடிக்குக் குறைந்த விதையளவு போதுமானது.

● நாற்றங்கால் பராமரிப்புச் செலவு குறைகிறது.

● இளம் நாற்றை நடுவதனால் விரைவான பயிர் வளர்ச்சி, அதிக வேர் வளர்ச்சி மற்றும் அதிக தூர்கள் கிடைப்பதனால் பயிர்களின் சாயாத தன்மை அதிகரிக்கிறது.

● மண்ணின் மேற்பரப்பில் உருளும் களைக்கருவிக் கொண்டு களையெடுப்பதனால் மண்ணின் காற்றோட்ட வசதி அதிகமாகும். இதனால் மண்ணில் நுண்ணுயிர்களின் செயல்பாடு அதிகமாகி மண்வளம் மேம்படுகிறது.

● 30 முதல் 40 சத நீர் சேமிக்கப்படுகிறது.

● பூச்சிநோய்த் தாக்குதல் மற்றும் எலித் தாக்குதல் குறைகிறது.

● முதிரும் பருவம் வரை பயிர் பசுமையாக இருப்பதனால் பதர் இல்லாத நன்கு முற்றிய நெல் மணிகள் கிடைக்கின்றன. இதனால் கூடுதலான தானிய மகசூலும் அதிக வைக்கோல் மகசூலும் கிடைக்கின்றன.

● விவசாயிகளுக்குக் கூடுதல் இலாபம் கிடைக்கிறது.

எனவே புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடித் தொழில் நுட்பங்களைக் கடைப்பிடித்து குறுவை பருவ நெல் சாகுபடியில் உயர் விளைச்சல் பெற்றுப் பயனடையுமாறு புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சு.சுந்தரமகாலிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார்.

# ஆடிப்பட்டத்தில் விதைப்புக்கு முன் விதைப்பரிசோதனை அவசியம்!

"ஆடிப்பட்டம் தேடி விதை" என்பது விவசாயத்தில் விதைப்புப் பணிகளைத் தொடங்குவதற்கான சரியான பருவத்தைக் குறிக்கும் பழமொழியாகும்.

கோடை காலம் முடிந்து தென்மேற்கு பருவமழையால் நிலம் ஈரப்பதத்தை பெறும், ஆடிப்பட்டத்தில் விதைத்தால் பயிர்கள் செழித்து வளர்ந்து நல்ல மகசூல் கிடைக்கும். தற்போது பசிபிக் பெருங்கடலில் உருவாகும் எல்-நினோ (El-Nino) காரணமாக மழைப்பொழிவு பற்றாக்குறை மற்றும் வறண்ட காலம் ஏற்பட வாய்ப்புள்ளதால் மானாவாரி சாகுபடி செய்யும் விவசாயிகள் அதிக தண்ணீர் தேவைப்படும் பயிர்களை தவிர்த்து தண்ணீர் குறைவாக தேவைப்படும் பயிறு மற்றும் சிறுதானியங்களை விதைப்பது சிறந்தது. சிறுதானியங்களை மதிப்புக்கூட்டி விற்பனை செய்தால் அக லாபம் பெறலாம்.

நாமக்கல் மாவட்டத்தில் ஆடிப் பட்டத்தில் நெல், மக்காச் சோளம், சோளம், நிலக்கடலை, பருத்தி, பச்சைப் பயிறு, உழுந்து, கொட்டமுத்து, போன்ற பயிர்கள் விதைப்பு செய்யப் படுகிறது. ஆதலால் விவசாயிகள், விதை விற்பனையாளர்கள், ஆடிப் பட்டத்தில் விதைப்பு மேற்கொள்ள பயன்படுத்தப்படும் விதைகளை விதைப்பரிசோதனை செய்து தரமான விதை என அறிவிக்கை செய்த விதைகளைப் பயன்படுத்தினால் நல்ல விளைச்சல் பெற்று பயனடையலாம்.

தரமான விதை என்பது பயிர்களுக்கேற்ப நிர்ணயிக்கப்பட்ட முளைப்புத்திறன் உடையதாகவும், பிறரக கலவன் இல்லமாலும், நிர்ணயிக்கப்பட்ட ஈரப்பதத்திற்கு மிகாமலும், பூச்சி மற்றும் நோய் தாக்குதல் இல்லாமலும் இருத்தல் வேண்டும்.

விதையின் தரத்தை அறிந்து கொள்ள நாமக்கல் மாவட்ட ஆட்சியர் கூடுதல் வளாக கட்டிடத்தில் அறை எண்.13இல் இயங்கி வரும் விதைப்பரிசோதனை நிலையத்தில் ஒரு மாதிரிக்கு ரூ.80/- கட்டணம் செலுத்தி விதையின் தரத்தை அறிந்து பயனடையலாம் என வேளாண்மை அலுவலர் செ.தேவிப்பிரியா தெரிவித்துள்ளார்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# டிராகன் புரூட் (DRAGON FRUIT) - ஒரு பார்வை



தைவானில் விளையும் கள்ளிச்செடி குடும்பத்தை சார்ந்த (PITAYA) இனத்தை சார்ந்த தாவரம் தான் இந்த டிராகன் புரூட்.

இது ஒரு வெப்ப மண்டல பயிராக இருப்பதால் விருதுநகர் (விடத்தக்குளம்) திண்டுக்கல் போன்ற பகுதியில் பயிரிடப் பட்டு வருகிறது. இது தண்டுகள் (STEM CUTTING) மூலமாக பயிரிடப்பட்டு வரு கிறது. இதற்கு படர்வதற்காக கல்தூண், சிமெண்ட் போல் (SUPPORT SYSTEM) நடப்பட்டு அதன்மீது படர்ந்து வளரும். 12-14 மாதங்களில் பூக்க தொடங்கும்.

**ட்ராகன் பூ மலர்வது எப்படி தெரியுமா?**

இந்த தாவரத்தின் முக்கியமான அதிசயமாக பார்க்கப்படுவது பூ மலர்வது தான். சீசன் தொடங்கும் போது ஒரு புள்ளி அளவில் பூக்கள் தென்பட்டு, பிறகு அரை அடிவரை நீண்டு சரியான பருவத்தில் இரவு 7 மணிக்கு மேல் பூ மூடிக் கொள்ளும் தன்மை உடையது. இது ஒரு பெரிய 'தாமரை பூ' வடிவத்தில் பார்ப்பதற்கு நம்மை ஈர்க்கும் தன்மை கொண்ட இந்த பூவிற்கு 'இரவு ராணி' என்றும் 'கமலப்பூ' என்றும் பெயரும் உண்டு. இந்த மூடி பூவின் பின்பகுதியில் காய் பிடித்து அது சிவப்புநிற பழமாக மாறுவதற்கு 48 நாட்கள் எடுத்துக் கொள்கிறது. இது வருடத்தில் ஜூன் முதல் நவம்பர் வரை விளைச்சல் தரும்.

**ட்ராகன் புரூட்-ன் பயன்கள்?**

இது உலகம் முழுவதும் ஆரோக்கிய உணவாக கருதப்படு கிறது. மேலும் இந்த பழத்தில் (ANTI-OXIDENT), வைட்டமின், பினால்கள் பிளோவானாய்டு தாதுக்கள் ஊட்டசத்துகள் நிறைந்த பழமாகும். இந்த அரிய வகை சுவை கொண்ட பழத்தில் இதயத்திற்கு தேவையான ஓமோகா 3 & 9, அதிகமாக உள்ளது.

மீன் மாத்திரையில் உள்ளதைவிட அதிகமாக உள்ளது. இந்த பழத்தில் உள்ள இருக்கும் விதைகள் கடுகை விட சிறியதாக உள்ளதால் ஓமோகா உள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன.

இதே சமயத்தில் ரத்தத்தில் உள்ள ஹிமோகுளோபின், சமநிலைப்படுத்தும் முக்கியமாக கேன்சர் நோயை கட்டுப்படுத்த உதவக்கூடிய பழமாகும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# நவீன வேளாண்மையில் கோடையில் தென்னை பராமரிப்பு

நெல் ,வாழை கரும்பு தென்னை என்று நாலாந்தர விவசாய பயிராக வளர்க்கப்பட்ட தென்னை சாகுபடி தற்போது தமிழ்நாட்டில் முதலிடத்திற்கு வந்து கொண்டிருக்கிறது.

வேலை ஆட்கள் பிரச்சனை, புழு பூச்சித் தொல்லை, தண்ணீர்ப் பிரச்சனை, மற்றுமுள்ள இயற்கை பிரச்சனைகளால் இதர பயிர்களை விட தென்னை வளர்த்தால் ஐந்து வருடம் கழித்தாவது ஒரு நிரந்தர வருமானம் கிடைக்கும் என்கிற நம்பிக்கை விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ளது.

திருவையாற்றில் அமைந்துள்ள தென்னை ஆராய்ச்சி மையம் 1996 ஆம் வருடம் நடத்திய கருத்துக் கணிப்பின் போது தென்னை சாகுபடி பெருகியுள்ளது. இதனால் தென்னை சாகுபடி யாளர்களது வருவாய் வளர்ந்துள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக தென்னை வளர்ப்பதால் மன அமைதியம், சந்தோசமும் ஏற்படுவதாக 99 சதவீத தென்னை சாகுபடியாளர்களும் கூறினார்கள்.

### மூன்று மாத கோடை

வருடத்தில் ஆறு மாதம் மிக உஷ்ணகாலம் மூன்று மாதம் குளிர், மூன்ற மாதம் கோடை, கடும் கோடை ஒன்பது மாதம் நன்கு வளர்த்த தென்னை மரங்களை மூன்று மாத கோடை வெயில் தாக்கி தென்னை மரங்களின் மட்டைகளை சரிந்து விடுகிறது.

### 55 லிட்டர் தண்ணீர்

மனிதனுக்கு ஒரு நாளைக்கு மூன்று லிட்டர் தண்ணீர் ஆட்டுக்கு 5 லிட்டர், பசுவுக்கு 10 லிட்டர், எருமைக்கு 20 லிட்டர் தண்ணீர் தினமும் தேவை. தென்னைக்கு 55 லிட்டர் தண்ணீர் தேவை என்பது சராசரி கணக்கு. கோடையில் நிலத்தடி நீர் பூமி மட்டத்திற்கு கீழ் போய் கொண்டிருக்கும். மேல் மண் காய்ந்து விடும் களிமண், வண்டல் மண், களர், உவர் மண் வாகு நிலங்களில் தென்னை மரங்களின் வேர்கள் 95 விழுக்காடு ஒன்றரை அடி ஆழத்திற்கு அமைந்துள்ளது. அதிக ஆழம் செல்வதில்லை.

தென்னை மரங்களின் வேர்கள் மண்ணின் மேல் பாகத்தில் பரவலாக நீளமாகச் செல்கிறது. மேலும் மண் காய்ச்சல் ஏற்படும் போது வேர்கள் காய்ந்து விடுகிறது. அதனால் தென்னை மரங்களின் மட்டைகள் பழுப்பு நிறம் ஏறி சரிந்து கொட்டி விடும். மரங்களும் செத்துவிட நேரிடுகிறது.

நாள் ஒன்றுக்கு 3 அங்குலம் வாய் அகலமுள்ள டெலிவரி பைப் மூலம் இரண்டு அல்லது மூன்று மணி நேரம் தண்ணீர் சப்ளை கிடைக்குமானால் அந்த தண்ணீரைக் கொண்டு பத்து முதல் 25 ஏக்கர் வரை உள்ள தென்னை மரங்களைக் காப்பாற்றி விடலாம்.

### உதிர்ந்த மட்டைகளைப் புதைத்தல்

உதிர்ந்த மட்டைகள், இலைச் சருகுகள் பாளை பன்னாடை களை தென்னை மரத்திலிருந்து 4 அடி தள்ளி வேர்கள் அறுபடாமல் முழு வட்டம் அமைத்துப் புதைந்து விடவும். ஒரு மாதம் வரை ஈரத்தைப் பாதுகாக்கின்றது. கரையான் மருந்து லேசாகப் பயன்படுத்தவும்.

### வாய்க்கால் வழி

தென்னை மரங்களிலிருந்து 5 அடி தள்ளி ஒரு சதுர வரப்பு அமைக்கவும், அதாவது 10 அடிக்கு 10 சதுர வரப்பு அமைத்து வரப்பின் விளிம்பு வழியாக ஒரு வாய்க்கால் அமைத்து அதன் வழியாக தண்ணீரை ஒரு தென்னைக்கு பாய்ச்சியதும், அடைத்து வாய்க்கால் வழியாக அடுத்த தென்னைக்குக் கொண்டு சென்று பாய்ச்சவும். தண்ணீரை நிறையப் பாய்ச்ச வேண்டும். தண்ணீர் குறைவாக கிடைக்குமானால் 15 நாட் களுக்கு ஒரு முறை பாய்ச்சினால் கூட தென்னை மரங்கள் பாதிக்காது. முதல் நாள் நூறு தென்னைக்கு மட்டும் நீர் பாய்ச்ச முடியும் என்றால் அடுத்த நாள் கிடைக்கும் தண்ணீரை வாய்க்கால் வழி கொண்டு சென்று 101-வது தென்னைக்கு பாய்ச்ச வேண்டும். இவ்வாறு தினமும் 2 அல்லது 3 மணி நேரம் கிடைக்கும் நீரை முறை வைத்து ஒழுங்கபடுத்தி பாய்ச்சி தென்னை மரங்களைக் காப்பாற்ற முடியும்.

### வீட்டு கழிவு நீர்

நான் ஒன்றுக்கு ஒரு மனிதன் குளிப்பது துணி துவைப்பது பாத்திரம் கழுவுவது என 25 லிட்டர் வரை தண்ணீரை புழங்கு கிறான். நான்கு, ஐந்து பேர் உள்ள ஒரு சிறிய குடும்பத்தில்

குடும்பத்தில் வெளியாகும் வீட்டுக் கழிவு நீர் மூலம் வீட்டுக்குத் தேவையான 4,5 தென்னை மரங்களை வளாக்க முடியும்.

வீட்டுக்கு கழிவு நீரை தென்னை மரங்கள் தொடும்படி நேரடியாக விடக்கூடாது. தென்னை மரங்களிலிருந்து மூன்று அல்லது நான்கு அடி தள்ளி முக்கால் அடி அகலத்தில் வேர்கள் அறுபடாமல் இரு வாய்க்கால் அமைத்து அதில் பாய்ச்சவும், வாராவாரம் வாய்க்கால் மாற்றி, அடுத்த வாய்க்கால் வழியாக இதர தென்னை மரங்களும் திருப்பி விடவும். பாய்ந்த இடம் காய்ச்சல் ஏற்படும். ஒரு வாரம் காய விட்டு மறுவாரம் பாயவிட்டு கழிவு தண்ணீரை பயன்படுத்தி விட்டு தோட்டத்து தென்னை மரங்களை வளர்க்கலாம்.

தென்னை மரம் தோட்டத்தின் ஒரு மூலையில் இருந்தால் லேசாக உடைந்த மண் பானை பிளாஸ்டிக் பக்கெட்டுகளை எடுத்து தென்னை மரத்திலிருந்து இரண்டு மூன்று அடி தள்ளி புதைத்து பத்துப் பாத்திரம் கழுவும் தண்ணீரையும், துணி துவைக்கும் தண்ணீரையும் சேகரித்து, தென்னை மரத்தின் பக்கத்தில் புதைந்துள்ள பாத்திரத்தில் ஊற்றவும், ஓட்டை வழி கசிந்து பூமியில் ஈரத்தைப் பாதுகாத்து தென்னையின் உயிரை பாதுகாக்கும் அடியில் உறையும் வண்டலை பத்து நாட்களுக்கு ஒரு முறை அப்புறப்படுத்தி விடவும்.

**சொட்டு நீர்ப் பாசனம்**

தென்னை மரங்களின் உயிருக்கு சொட்டு நீர்ப் பாசனம் உத்தரவாதமாக உள்ளது. கட்டை, நெட்டையாக இரு டேப் அமைத்து தேங்கி அகலமாக பாயுமாறு பார்த்துக் கொள்வது நல்ல பலன் தருகிறது. தினமும் பாய்ச்சாமல் சில நாள் விட்டுப் பாய்ச்சவும்.

***தகவல் :*** *யுவராஜா தட்சிணாமூர்த்தி, வேளாண்மை பொறியாளர், உடுமலை.*



# பூச்சிகளை கட்டுப்படுத்துவதில் இனக்கவர்ச்சி பொறிகளின் பங்கு

பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதில் இனக்கவர்ச்சி பொறிகள் மிக முக்கியமான இயற்கை முறையாக விளங்குகின்றன. இவை ரசாயன மருந்துகளுக்கு மாற்றாகப் பயன்படுத்தப்படுகின்றன.

## இனக்கவர்ச்சி பொறிகளின் அடிப்படைத் தத்துவம்



- இனக்கவர்ச்சி பொறிகள் பூச்சிகளின் இயற்கை இனப்பெருக்க நடத்தைக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டவை. பெண் பூச்சிகள் சுரக்கும் ஃபெரோமோன் எனும் வாசனைப் பொருளைப் பயன்படுத்தி ஆண் பூச்சிகளைக் கவர்ந்து இழுக்கின்றன. இதன் மூலம் பூச்சிகளின் இனப்பெருக்கம் தடுக்கப்படுகிறது.

- இந்தப் பொறிகள் பெண் பூச்சியின் வாசனையைத் தழுவி செயற்கையாகத் தயாரிக்கப்பட்ட லெமினேன் அல்லது ஜெல் வடிவிலுள்ள ஃபெரோமோன்களைப் பயன்படுத்துகின்றன. ஆண் பூச்சிகள் இந்த வாசனைக்கு ஈர்க்கப்பட்டு பொறியில் விழுவதன் மூலம் அழிக்கப்படுகின்றன அல்லது சேகரிக்கப்படுகின்றன.

- ஒரு ஆண் பூச்சி அழிக்கப்படும் போது, 200-300 புழுக்கள் உற்பத்தி தடுக்கப்படுகிறது. இது பயிர்ச் சேதத்தைக் குறைக்கும் சிறந்த முறை.

## பூச்சிக் கட்டுப்பாட்டில் பங்கு

- பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும், தாக்குதலை முன்னறிவதற்கும் இனக்கவர்ச்சி பொறிகள் உதவுகின்றன. தினமும் 2-5 பூச்சிகள் ஒரு பொறியில் விழுவதன் மூலம் பூச்சி அளவைக் கணிக்கலாம்.

- இவை குறிப்பாக காய்கறி, பந்தல் பயிர்கள், நெல், பயறு வகைகளைத் தாக்கும் பூச்சிகளான அமெரிக்கன் காய்ப்புழு, தக்காளி பழ துளைப்பான், தண்டு துளைப்பான் போன்றவற்றைக் கட்டுப்படுத்துகின்றன. ரசாயன மருந்துகளை விட இது சூழலை மாசுபடுத்தாது.

● பெண் பூச்சிகள் ஆணுடன் சேராமல் கருவுறா முட்டைகள் இடுவதால் புழு உற்பத்தி நின்று விடுகிறது. இதனால் பயிர் மேலாண்மை செலவு குறையும்.



**பொறிகளின் வகைகள்**

● புனல் வடிவ இனக்கவர்ச்சி பொறி காய்கறி புழுக்களைக் கட்டுப்படுத்த பயன்படுகிறது. இது ஆண் பூச்சிகளை கவர்ந்து பாலிதீன் பையில் சேகரிக்கிறது.

● விளக்குப்பொறிகள், மஞ்சள் ஒட்டும் அட்டைப் பொறிகள் ஆகியவை இனக் கவர்ச்சியுடன் இணைந்து பயன்படுத்தப்படலாம். ஃபெரோமோன் சிமிழ்கள் 30-40 மீட்டர் இடைவெளியில் வைக்கப்படுகின்றன.

● ஒரு ஏக்கருக்கு 5-12 பொறிகள் போதும். கண்காணிப்புக்கு 2 பொறிகள் சுமார்.

**நன்மைகள் மற்றும் பயன்பாடு**

● சுற்றுச்சூழல் மாசு இல்லை, நன்மை செய்யும் பூச்சிகளுக்கு பாதிப்பில்லை, எதிர்ப்புத் தன்மை உருவாகாது. காய்கறிகளுக்கு பூச்சிக்கொல்லிகள் தேவையில்லை.

● இவற்றை வயலில் ஆங்காங்கே 1-1.5 மீட்டர் உயரத்தில் வைக்கவும். ஃபெரோமோன் மாற்ற 4-6 வாரங்களுக்கு ஒரு முறை.

● தோட்டக்கலைத் துறை, வேளாண் பல்கலைக்கழகங்கள் இவற்றைப்பரிந்துரைக்கின்றன. உடுமலை, தஞ்சாவூர் போன்ற இடங்களில் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

**பயன்பாட்டு முறைகள்**

● பயிர் தொடங்கும் முன் பொறிகளை வைக்கவும். தினசரி பூச்சிகளை எண்ணி பதிவு செய்யவும். தாக்குதல் அதிகமானால் இயற்கை மருந்துகளுடன் இணைக்கவும்.

தகவல் : ***முனிசா.மா, மதுரஞ்சனா.ஜெ,ல்., பசுபதி.இ, கிருஷ்ணா வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப கல்லூரி, மதுரை-625 532.***

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

isha LMW POWERGRID BHEL

**Office**
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# SAI Foundation - வேளாண்மை, ஆரோக்கியம் மற்றும் புதுமை சார்ந்த தொழில்முனைவோருக்கான வளர்ச்சி மையம்

SAI Foundation பற்றி




சோனா ஆக்சிலரேட்டர் & இன்குபேஷன் ஃபவுண்டேஷன் (SAI Foundation) என்பது Sona Group of Institutions-இன் புதுமை மற்றும் ஸ்டார்ட் அப் இன்குபேஷன் மையமாகும். சமூகத்திற்கு பயனளிக்கும், நிலைத்தன்மை கொண்ட தொழில்முனைவுகளை உருவாக்கும் நோக்கில் இந்த நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

சேலம் மற்றும் பெங்களூருவில் இயங்கி வரும் இன்குபேஷன் மையங்கள் மூலம், வேளாண் தொழில்நுட்பம் (AgriTech), ஆயுஷ் (AYUSH), நல்வாழ்வு (Wellness), இயற்கை மருத்துவம் & யோகா (Naturopathy & Yoga), செயல்பாட்டு உணவுகள் (Functional Foods), சுகாதாரம் (Health care), மற்றும் நிலைத்த தொழில்நுட்பங்கள் (Sustainable Technologies) போன்ற துறைகளில் புதுமைகளை உருவாக்கும் தொழில்முனைவோருக்கு முழுமையான ஆதரவை வழங்குகிறது.

Sona கல்வி நிறுவனங்களின் பல்துறை கல்வி மற்றும் ஆராய்ச்சி வலிமையைப் பயன்படுத்தி, கல்வி, ஆராய்ச்சி, தொழில்துறை மற்றும் தொழில்முனைவு ஆகியவற்றுக்கு இடையே பாலமாக செயல்படும் SAI Foundation, புதுமையான யோசனைகளை வணிக ரீதியாக வெற்றிகரமான நிறுவனங்களாக மாற்ற உதவுகிறது.

குறிப்பாக, இந்திய பாரம்பரிய அறிவு, அறிவியல் ஆராய்ச்சி மற்றும் நிலைத்த தொழில் மாதிரிகளை ஒருங்கிணைத்து சமூகத்தின் உண்மையான பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் ஸ்டார்ட் அப்களுக்கு முன்னுரிமை அளிக்கிறது.

**எங்கள் சேவைகள்**

SAI Foundation, தொழில்முனைவோர் மற்றும் ஸ்டார்ட் அப்களுக்கு ஆரம்ப கட்டத்திலிருந்து வளர்ச்சி நிலை வரை முழுமையான ஆதரவை வழங்குகிறது.

● ஸ்டார்ட்அப் இன்குபேஷன் மற்றும் ஆக்சிலரேன் திட்டங்கள்

● வணிக மாதிரி (Business Model) உருவாக்கம் மற்றும் சந்தை சரிபார்ப்பு (Market Validation)

● தொழில்நுட்ப மற்றும் தயாரிப்பு மேம்பாட்டு ஆதரவு

● தொழில்துறை நிபுணர்கள், மருத்துவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் வெற்றிகரமான தொழில்முனைவோரின் வழிகாட்டுதல்

● முதலீட்டாளர் சந்திப்பிற்கான (Investor Readiness) தயாரிப்பு மற்றும் நிதி திரட்டும் ஆதரவு

● அரசின் மானியங்கள் மற்றும் ஸ்டார்ட்அப் திட்டங்களுக்கு விண்ணப்பிக்கும் உதவி

● அறிவுசார் சொத்துரிமை (IP), காப்புரிமை (Patent) மற்றும் ஒழுங்குமுறை (Regulatory) வழிகாட்டுதல்

● தயாரிப்புகளை வணிகமயமாக்குதல் மற்றும் சந்தை அணுகல்

● தொழில்துறை மற்றும் நிறுவனங்களுடன் கூட்டாண்மை

● தொழில்முனைவு மேம்பாட்டு பயிற்சிகள், பட்டறைகள், Boot-camp–கள் மற்றும் Pitching நிகழ்ச்சிகள்

வேளாண் தொழில்நுட்பம், ஆயுஷ், நல்வாழ்வு, இயற்கை மருத்துவம், யோகா, செயல்பாட்டு உணவுகள், இயற்கை சுகாதாரப் பொருட்கள், கிராமப்புற புதுமைகள் மற்றும் நிலைத்த தொழில் முனைவுகளை மையமாகக் கொண்டு, சமூக நலனையும் இந்தியாவின் நிலையான வளர்ச்சிக் கனவையும் முன்னெடுக்கும் புதுமையான தயாரிப்புகள் மற்றும் சேவைகளை உருவாக்க ஸ்டார்ட்அப்களை SAI Foundation ஊக்குவிக்கிறது.

**Rural Pitch 2026**

சமூக தாக்கத்தை உருவாக்கும் புதுமைகளை ஊக்குவிக்கும் தனது நோக்கத்தின் ஒரு பகுதியாக, Young Indians (Yi) மற்றும் Startup Singam இணைந்து Agri Intex 2026–இன் கீழ் நடத்திய Rural Pitch 2026 போட்டியில் SAI Foundation பங்கேற்றது.

இந்த போட்டி, வேளாண்மை, சுகாதாரம், நிலைத்த வளர்ச்சி, கிராமப்புற வாழ்வாதாரம் மற்றும் சமூக முன்னேற்றம் போன்ற துறைகளில் புதுமையான தீர்வுகளை உருவாக்கிய கிராமப்புற மற்றும் மாணவர் தொழில்முனைவோருக்கு தங்களது யோசனை களை அறிமுகப்படுத்தும் முக்கியமான தளமாக அமைந்தது.

தமிழகம் முழுவதும் இருந்து 150–க்கும் மேற்பட்ட ஸ்டார்ட்அப் விண்ணப்பங்கள் பெறப்பட்டன. கடுமையான தேர்வு செயல்முறைக்கு பிறகு, சுமார் 70 ஸ்டார்ட்அப்கள் முதல் சுற்று Pitching–க்கு தேர்வு செய்யப்பட்டன. இந்த நிகழ்வு கோயம்புத்தூரில் உள்ள PSGR Krishnammal College for Women–இல் நடைபெற்றது.

தொழில்முனைவோர், முதலீட்டாளர்கள் மற்றும் துறை நிபுணர்கள் மேற்கொண்ட விரிவான மதிப்பீட்டின் பின்னர், சிறந்த 10 ஸ்டார்ட்அப்கள் மட்டுமே 2026 ஜூலை 11 அன்று CODISSIA Trade Fair Complex, Coimbatore-இல் நடைபெற்ற Agri Intex 2026 Grand Finale-க்கு முன்னேறின.

**எங்கள் சாதனை**

இந்த சிறந்த 10 இறுதிப் போட்டியாளர்களில், SAI Foundation–இல் இன்குபேட் செய்யப்பட்டு IAMUSAP Ventures குழுவின் வழிகாட்டு தலுடன் வளர்ந்த Varna Naturals நிறுவனம் "Best Student Startup Award" விருதைப் பெற்று ₹.10,000 ரொக்கப் பரிசையும் வென்றது.

Sona Medical College of Naturopathy and Yoga மாணவர்களால் தொடங்கப்பட்ட Varna Naturals, ஆயுர்வேதம் மற்றும் இயற்கை மருத்துவத்தின் அடிப்படையில் அறிவியல் ஆதாரங்களுடன் இயற்கை தனிநபர் பராமரிப்பு (Personal Care) தயாரிப்புகளை உருவாக்கி வருகிறது.

SAI Foundation வழங்கிய தொடர்ச்சியான வழிகாட்டுதலின் மூலம், தயாரிப்பு மேம்பாடு, பிராண்டிங், வணிகத் திட்டமிடல், வாடிக்கை யாளர் சரிபார்ப்பு (Customer Validation) மற்றும் முதலீட்டாளர் Pitching ஆகிய துறைகளில் நிறுவனம் தனது திறனை மேம்படுத்தி, இந்த போட்டியில் சிறந்த மாணவர் ஸ்டார்ட்அப் என்ற அங்கீகாரத்தைப் பெற்றது. இந்த வெற்றி, SAI Foundation–க்கு மேலும் ஒரு முக்கிய மான மைல்கல்லாக அமைந்துள்ளது. வேளாண்மை, ஆயுஷ், நல்வாழ்வு, இயற்கை மருத்துவம், யோகா, செயல்பாட்டு உணவுகள் மற்றும் நிலைத்த புதுமைகள் போன்ற துறைகளில் சமூகப் பொறுப்புணர்வுடன் செயல்படும் ஸ்டார்ட் அப்களை உருவாக்கும் எங்கள் முயற்சியின் வெற்றியை இது வெளிப்படுத்துகிறது. மேலும், கடந்த மூன்று மாதங்களில் SAI Foundation–இன் மூன்றாவது முக்கிய ஸ்டார்ட்அப் வெற்றியாக இது அமைந்துள்ளது. எங்கள் இன்குபேன் சூழல் மற்றும் வழிகாட்டல் அமைப்பின் தரத்தையும் தாக்கத்தையும் இது உறுதிப்படுத்துகிறது.

SAI Foundation தனது புதுமைச் சூழலை தொடர்ந்து விரிவுபடுத்தி வரும் நிலையில், பாரம்பரிய அறிவையும் நவீன அறிவியலையும் ஒருங்கிணைத்து சமூக நலன், கிராமப்புற பொருளாதார முன் னேற்றம் மற்றும் நிலையான வளர்ச்சிக்கு பங்களிக்கும் தொழில் முனைவோரை உருவாக்கும் தனது பணியை மேலும் வலுப்படுத்தி வருகிறது. ‘இயற்கை, ஆரோக்கியம் மற்றும் நிலைத்தன்மையை மையமாகக் கொண்ட புதுமைகளே மனித வாழ்வை மாற்றி, சிறந்த எதிர்காலத்தை உருவாக்கும் சக்தி கொண்டவை‘ என்பதே SAI Foundation–இன் உறுதியான நம்பிக்கையாகும்.

# AGRI INTEX 2026 களப்பயணம்

## காலநிலைக்கு ஏற்ற வேளாண் தொழில்நுட்பங்களை அறிந்து கொண்ட கட்டங்குடி, செம்பட்டி விவசாயிகள்

கரூர் வைஸ்யா வங்கி (KVB) CSR ஆதரவுடன், VIDIYAL (Centre for Social Interaction) செயல்படுத்தி வரும் "Climate Resilient Dry-Land Agriculture for Ecological and Livelihood Security" திட்டத்தின் பயனாளிகள், கோயம்புத்தூர் CODISSIA வளாகத்தில் நடைபெற்ற



AGRI INTEX 2026 சர்வதேச வேளாண் கண்காட்சியை பார்வையிட்டனர்.

**இந்த களப்பயணத்தின் மூலம் விவசாயிகள்**




1. காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் Climate Smart Agriculture தொழில் நுட்பங்களை அறிந்து கொண்டனர்.

2. நீர் சிக்கன பாசன முறைகள், மண் வள பாதுகாப்பு மற்றும் இயற்கை வள மேலாண்மை குறித்த புதிய அணுகுமுறைகளைப் பார்வையிட்டனர்.

3. பாரம்பரிய விதைகள் (Traditional Seeds) பாதுகாப்பு, பரிமாற்றம் மற்றும் உள்ளூர் சூழலுக்கு ஏற்ற பாரம்பரிய பயிர் ரகங்களின் முக்கியத்துவத்தை அறிந்துகொண்டனர்.

4. இயற்கை வேளாண்மை நடைமுறைகளை வெற்றிகரமாக செயல்படுத்தி வரும் முன்னோடி விவசாயிகளின் (Practitioners) அனுபவங்களை நேரடியாகக் கேட்டு, குறைந்த செலவில் அதிக மகசூல் பெறும் வழிமுறைகள், மண் ஆரோக்கிய மேம்பாடு மற்றும் நஞ்சில்லா உணவு உற்பத்தி குறித்த பயனுள்ள கருத்துகளைப் பெற்றனர்.

5. கால்நடை வளர்ப்பு, கால்நடை ஆரோக்கியம், தீவன மேலாண்மை மற்றும் ஒருங்கிணைந்த பண்ணைய முறைகள் மூலம் வாழ்வாதார பாதுகாப்பை (Livelihood Security) வலுப் படுத்தும் புதிய வாய்ப்புகளை ஆராய்ந்தனர்.

6. நவீன வேளாண் இயந்திரங்கள், மதிப்புக்கூட்டல் தொழில் நுட்பங்கள், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பயன்பாடுகள் மற்றும் வேளாண் புதுமைகளை நேரில் பார்வையிட்டு அறிந்து கொண்டனர்.

7. பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் தொழில் முனைவோருடன் கலந்துரையாடி, தங்களது விவசாயத்தை மேம்படுத்த புதிய வாய்ப்புகளை ஆராய்ந்தனர்.

இத்தகைய களப்பயணங்கள் விவசாயிகளின் அறிவுத் திறனை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல், காலநிலை மாற்றத்திற்கேற்ப நிலையான வேளாண்மை, இயற்கை விவசாயம், பாரம்பரிய விதை பாதுகாப்பு, மற்றும் விவசாயிகளின் வாழ்வாதார முன்னேற்றத்திற்கு புதிய நம்பிக்கையையும் ஊக்கத்தையும் உருவாக்குகின்றன.

# ஆடிப்பட்டம் தேடி விதைத்தால் அதிக மகசூல் நிச்சயம்

கோடை வெப்பம் தணிந்து பருவமழை ஆரம்பிக்கும் காலம் ஆடி மாதம் என்பதால் முன்னோர்கள் ஆடிப்பட்டம் தேடி விதை என்பார்கள், ஆடி பெருக்கு அன்று தண்ணீர் வசதியுள்ள விவசாயிகள் விவசாய பணிகளை மேற்கொள்வர். எனவே அதிக மகசூல் பெற தரமான விதைகளைப் பயன்படுத்துவதன் மூலம் குறைந்த விதை அளவு, சீரான மற்றும் வேகமான முளைப்புத்திறன், சீரான பயிர் எண்ணிக்கை ஒருமித்த பூக்கும் தன்மை, சீரான முதிர்ச்சிப் பருவம், குறைவான பூச்சி மற்றும் நோய் தாக்குதல் மற்றும் 15 முதல் 20 சதவிகிதம் வரை அதிக மகசூல் ஆகிய நன்மையைப் பெறலாம்.

எனவே விவசாயிகள் சான்று பெற்ற விதைகளை வாங்கி பயன்படுத்த வேண்டும். சான்று பெற்ற விதைகள் அனைத்தும் விதைச்சான்று அலுவர்களால் வயல் ஆய்வில் வயல் தரம் உறுதி செய்யப்பட்டு பின்னர் விதைப்பரிசோதனை நிலையத்தில் விதை பரிசோதனை செய்து முளைப்புத்திறன் புறத்தூய்மை, ஈரப்பதம் மற்றும் பிற இரகக் கலவன் பிற பயிர் விதைகள் அனுமதிக்கப்பட்ட அளவு கொண்டுள்ளதா என்பதை உறுதி செய்த பின்னர் விநியோகிக்கப்படுவதால் சான்று பெற்ற விதைகளைப் பயன்படுத்தி தேவையான பயிர் எண்ணிக்கை யினை பராமரிக்கலாம்.

விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட விவசாயிகள் தங்களிடம் உள்ள விதைகளை பரிசோதனை செய்ய விதை மாதிரி ஒன்றுக்கு ரூ.80/- ஆய்வுக்கட்டணமாக செலுத்தி விதையின் தரம் அறிந்து விதைக்கவும். அறுவடை செய்த விதையினை அடுத்த விதைப்புக்கு சேமிக்கவும். விதையின் ஈரப்பதம் அறிந்து கொண்டு விதைகள் பூச்சி நோய் தாக்கு தலுக்கு உள்ளாகாமலும் சேமிக்கலாம் என வெ.சோபனா, மூத்த வேளாண்மை அலுவலர் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் விவரங்களுக்கு வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக முதல் மாடியில் இயக்கி வரும் விதை பரிசோதனை நிலையம். விழுப்புரம் என்ற முகவரியை அணுகலாம் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

# விதையின் ஈரப்பதம் அறிந்து விதைகளை சேமிக்க வேண்டுகோள்!

'வித்தே விளைவின் ஆதாரம்' வேளாண் உற்பத்தியை பெருக்கி விவசாயிகளின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதில் விதைகளின் பங்கு இன்றியமையாதது. விதையின் ஈரப்பதம் என்பது விதை சேமித்துள்ள நீரின் அளவாகும். தரமான விதை. விளைச்சலில் 15% உயர வழிவகுக்கிறது.

தமிழகத்தில் விதைக்கான உற்பத்தி ஆண்டு முழுவதும் நடைபெறுவதில்லை. எனவே அறுவடைக் காலத்தில் விதைகளை தகுந்த முறையில் சுத்திகரிப்பு செய்து சேமித்து வைக்க வேண்டும். விதைகளை சேமிக்கும் போது பூச்சிகள் மற்றும் நோய் தாக்குதலில் இருந்து பாதுகாப்பது மிகவும் முக்கியமானதாகும். புதிதாக அறுவடைசெய்யப்பட்டவிதைகளில் ஈரப்பதம் 20% முதல் 25% வரை காணப்படும். இதனை 10% முதல் 13% வரை குறைக்க காலை வெயிலில் உலர்த்திய பின்னரே சேமிக்க வேண்டும்.

ஈரப்பதம் அதிகம் இருப்பின், விதையானது, பூச்சி தாக்குதலுக்கு உள்ளாகும் வாய்ப்பு அதிகம். விதை சேமிப்பின் மிகப்பெரிய சவாலாக கருதப்படுபவை புழுக்கள் மற்றும் பூச்சிகளாகும். இவற்றால் விளைச்சலில் 2.5% இழப்பு ஏற்படுகிறது. பூச்சிகளும், பூஞ்சாணங்களும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. இந்தப் பூச்சிகள் விதைகளை துளைத்து உண்டு சேதப்படுத்துவதுடன் அவற்றின் கழிவுகளை விதைக் குவியலில் சேர்த்து அந்த விதை குவியல் முழுவதையும் சேதப்படுத்தி விதைக்குவியலின் ஈரப் பதத்தினை அதிகமாக்கி அதனை பூஞ்சாணத் தாக்குதலுக்கு ஆளாக்கி விதைகளி லிருந்து துர்நாற்றம் வீச செய்கிறது. இதனால் விதையின் முளைப்புத்திறன் வீரியம் குறைந்து விதைப்பதற்கு தகுதியற்றவை ஆகிறது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

விதைகள் அதிக முளைப்புத்திறனுடன் இருக்கவும், உரிய காலம் வரை சேமிக்கவும் நெல் - 13% சோயாபீன்ஸ், சிறுதானியங்கள், பப்பாளி - 12% பயறு வகைகள் நிலக்கடலை, சூரியகாந்தி, எள், கொத்தவரை, பீட்ரூட், பாலக்கீரை - 9% முருங்கை, புளிச்சை, வெங்காயம், கத்திரி, மிளகாய், தக்காளி - 8% மற்றும் காலிப் பிளவர், முட்டைக்கோஸ், நூல்கோல், சுரை, பாகல், புடல், பீர்க்கு, பூசணி, பரங்கி, தர்பூசணி, வெள்ளரி - 7% பரிந்துரைக்கப்பட்ட ஈரப்பத அளவுகள் இருக்க வேண்டும்.

எனவே, கரூர் மாவட்ட விவசாயிகள் அதிக மகசூல் பெற்று அதிக லாபம் பெறவும் விதை இடுபொருள் செலவினைக் குறைக்கவும், தங்களிடம் உள்ள விதைகளை விதை மாதிரி ஒன்றுக்கு ரூ.80/- ஆய்வுக் கட்டணமாக செலுத்தி கரூர் காந்தி கிராமம், திண்ணப்பா நகர் முதல் தெருவிலுள்ள விதைப் பரிசோதனை நிலையத்தில் பரிசோதனை செய்து விதையின் தரம் அறிந்து விதைக்கவும், அறுவடை செய்த விதையினை அடுத்த விதைப்புக்கு சேமிக்கும் பட்சத்தில் உரிய முறையில் சேதமில்லாமல் அறுவடை செய்து, விதையின் ஈரப்பதம் அறிந்து கொண்டு, விதைகள் பூச்சி நோய் தாக்குதலுக்கு உள்ளாகாமல் சேமிக்குமாறு கரூர், விதைப் பரிசோதனை நிலைய மூத்த வேளாண் அலுவலர் க.ரமேஷ் குமார் கேட்டுக் கொள்கிறார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**



# தண்ணீர் பற்றாக்குறை மற்றும் அதிக வெப்பத்தினால் நெல் பயிர் பாதிப்பு

இராணிப்பேட்டை, ஜுலை 13

இராணிப்பேட்டை மாவட்டம், திமிரி வட்டாரத்திற்குட்பட்ட கிராமங்களில் தண்ணீர் பற்றாக்குறை மற்றும் அதிக வெப்பத்தினால் நெல் பயிரில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை வேளாண்மை உதவி இயக்குனர் ராமன் பார்வையிட்டு கூறியதாவது, எதிர்பாராத இயற்கை இடர் பாடுகள் மூலம் ஏற்படும் பயிர் சேதாரங்களின் இழப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ள சொர்ணவாரி பருவத்தில் சாகுபடி செய்யப் பட்டுள்ள நெற்பயிர்களை பயிர் காப்பீடு திட்டத்தில் பதிவு செய்ய விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது. சொர்ணவாரி நெல் பயிர்களை காப்பீடு செய்ய வரும் ஜுலை 15ஆம் தேதி கடைசி நாளாகும். இத்திட்டத்தில் நெல் சாகுபடி செய்துள்ள அனைத்து விவசாயிகளும் விருப்பத்தின் பெயரில் காப்பீடு செய்யலாம்.

சொர்ணவாரி நெல் (நெல் I) பயிருக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.703 பிரீமியம் செலுத்தி பயிர் காப்பீடு செய்யலாம். விவசாயிகள் கணினி சிட்டா, பயிர் சாகுபடி அடங்கல், ஆதார் அட்டை மற்றும் வங்கி கணக்கு புத்தகம் ஆகிய ஆவணங்களுடன் அனைத்து தேசிய மயமாக்கப்பட்ட வங்கிக் கிளைகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் பொது சேவை மையங்களில் பிரிமியம் தொகையை செலுத்தி பயிர் காப்பீடு செய்யலாம். இந்த வருடம் எல் நினோ நிகழ்வு காரணமாக வெப்பநிலை அதிகமாகவும் பருவமழையின் அளவு குறையவும் வாய்ப்பு உள்ளது என்பதால் நெற்பயிரை இயற்கையின் சேதங்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ள விவசாயிகள் தங்களது நெற்பயிரே மேல் காப்பீட்டு திட்டத்தில் பதிவு செய்ய வேண்டும்.

மேலும் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல் மற்றும் நிலக்கடலை பயிர்களை வறட்சியில் இருந்து காக்க ஒரு சதவீதம் பொட்டாசியம் குளோரைடு கரைசலை இலை வழியாக தெளிக்கலாம். பூப்பூக்கும் மற்றும் கதிர் உருவாக்கும் பருவங்களில் ஏற்படும் வறட்சியை தவிர்க்க ஒரு ஏக்கருக்கு 200 மில்லி லிட்டர் பிபிஎஃப்எம் (PPFM) கரைசலை விலை வழியாக தெளிக்கலாம். வெயிலின் தாக்கம் அதிகம் உள்ள நேரங்களில் தண்ணீர் பாய்ச்சுவதையோ உரம் மற்றும் பூச்சி மருந்து தெளிப்பதையோ தவிர்க்க வேண்டும். மேற்கண்ட வயல் ஆய்வின்போது வேளாண்மை அலுவலர் கனகராசு, உதவி வேளாண்மை அலுவலர் டில்லி ராஜா மற்றும் விவசாயிகள் பலர் உடன் இருந்தனர்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333